IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 137/2015 Date: 15.04.2025

DW1-தங்கராஜ்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திருமணத்தின் போது எனக்கு வயது சுமார் 20 இருக்கும். என் திருமணத்தின் போது என் தகப்பனார் உயிருடன் இல்லை. என் மூத்த அக்கா பாஞ்சாலி திருமணத்தின் போது மட்டும் தான் என் அப்பா உயிருடன் இருந்தார் என்றாலும் மற்ற 5 மக்கள் திருமணத்தின் போது அவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். என் தம்பி பழனியப்பனுக்கு என்னை விட 3 வயது குறைவு. என் அப்பா ஆரம்பத்தில் செங்கல் சூளை வைத்திருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு என் அப்பா செங்கல் சூளையை விற்பனை செய்தார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு அதே கிராமத்தில் பூர்வீக நிலமிருந்தது. அந்த நிலம் இருந்ததற்கான ஆதாரம் என்னிடமில்லை. என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஆகிவிட்டது என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பாக கறாரின் போது என்னுடைய வயது 20 இருக்கும். வாய்மொழி கறார் 1974ல் நடைபெற்றது. தேதி, மாதம் தெரியாது. ராமசாமி, சாமியண்ணகவுண்டர், தங்கவேல் கவுண்டர், ஆண்டிமுத்துகவுண்டர் ஆகியோர் முன்னிலையில் பாகம் பிரித்து கொடுத்தார், அன்று தை பொங்கல். அப்போது நிலத்தை கயிறு கொண்டு அளந்தார்கள். இந்த விவரங்களை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட ஆட்கள் யாரும் இப்போது உயிருடன் இல்லை. என் தம்பி பழனியப்பனை நிலத்தில் விவசாயம் செய்ய நான் விடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/6 பாகம் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் தாவா சொத்தில் கூட்டாக சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்குமாறு வாதிகள் என்னிடம் கேட்கவில்லை. நானும் பாகம்

பிரித்து கொடுப்பதாக சொல்லவில்லை. தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமையில்லை என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-தங்கராஜீ

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.